செ.வெ.எண்: 304/2020 நாள்:14.09.2020

**<u>தேசிய குடற்புழு நீக்க நாளினை முன்னிட்டு காஞ்சிபுரத்தில் குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கும் திட்டத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., துவக்கி வைத்தார்.</u>**

தேசிய குடற்புழு நீக்க நாள் 14.09.2020 முதல் 26.09.2020 வரை காஞ்சிபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்படவுள்ளது. அதன்படி, இன்று (14.09.2020) காஞ்சிபுரம் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பு அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்ற முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் கலந்துக்கொண்டு மாணவ, மாணவிகளுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கினார். மேலும் இராகவேந்திரா நகரில் உள்ள அங்கன்வாடி மைய குழந்தைகளுக்கும், இராகவேந்திரா நகரில் உள்ள வீடுகளுக்கு நேரில் சென்று குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1 முதல் 19 வயது வரை உள்ள 3,73,799 குழந்தைகள் மற்றும் மாணவர்களுக்கு அல்பென்டசோல் என்ற சப்பி சாப்பிடும் குடிற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்படவுள்ளது. காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், அங்கன்வாடி மையங்கள் மூலம் அனைத்து குழந்தைகள் மற்றம் மாணவர்களுக்கு குடற்புழு நீக்க மாத்திரைகளை வழங்கப்படவுள்ளது. 1 முதல் 2 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு தலா அரை மாத்திரையும், 2 முதல் 19 வயது உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தலா 1 ஒரு மாத்திரையும் வழங்கப்பட வேண்டும். மேலும் விடுபட்டவர்களுக்கு வரும் 28.09.2020 அன்று குடற்புழு நீக்க மாத்திரைகள் வழங்கப்படவுள்ளது. குடற்புழுக்களை நீக்கி குழந்தைகள் ஆரோக்கியத்தைக் பேணி காக்க அனைத்து மக்களும் ஒத்துழைப்பு தருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் அன்புடன் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிகழ்வின் போது, துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.பழனி, வட்டார மருத்துவ அலுவலர் மரு.அருள்மொழி நகர் நல அலுவலர் (பொ) மரு.பிரசன்னா, மருத்துவ அலுவலர் மரு.நாசிக், காஞ்சிபுரம் வட்டாட்சியர் திருமதி.பவானி, மற்றும் மருத்துவப் பணியாளர்கள் பலர் கலந்துக்கொண்டனர்.

செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், காஞ்சிபுரம்.